Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.397/2021

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.முருகேசன்** | Occupation | உதவி செயற்பொறியாளர் அனுப்பன்குளம் |
| Father's name | **கணபதி** | Calling | |
| Village | **ஆண்டாள் நகர்** | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of March 2026.

06.03.2026

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அனுப்பன்குளத்தில் உதவிசெயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.03.2014 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் வாழைக்குளம் கிராமம் அத்திதுண்டு அருகே 6 வயது மதிக்கத்தக்க ஆண்யானை ஒன்று இறந்து கிடப்பதாக மம்சாபுரம் மின்சாரவாரியத்தில் பணிபுரிந்த அழகுமலை மஸ்தூர் என்பவர் அவருடைய உதவி பொறியாளராக மம்சாபுரம் தமிழ்நாடு மின்சார வாரிய உதவி மின்பொறியாளர் முனியசாமி அவர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் மம்சாபுரம் உதவி பொறியாளர் அவர்கள் அவருடைய மேல் அதிகாரியாக பணிபுரிந்து வந்த முருகேசன் ஆகிய என்னிடம் 07.03.2024 அன்று காலை சுமார் 08.00 மணியளவில் போன்மூலம் தகவல் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நானும் எனது செயற்பொறியாளர் திருவில்லிபுத்தூர் அவர்களும் சம்பவயிடத்திற்கு சென்றோம். சம்பவயிடத்தில் வனச்சரக அலுவலர் மற்றும் வாழைக்குளம் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் இருந்தனர். அவர்களுடன் சேர்ந்து இறந்த யானை சம்மந்தமாக கலந்துரையாடினோம். அதில் வாழைக்குளம் கிராமம் சர்வே எண்.268/2F ல் உள்ள மின்

இணைப்பு எண்.267-005-262 என்ற மின் இணைப்பின் தாழ்வழுத்த மின்பாதையிலிருந்து கொக்கி போட்டு அதன் மூலம் மின்சாரம் எடுத்து 32 மீட்டர் வரை கொண்டு சென்று அங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த 35 மீட்டர் நீளமுள்ள 2 அடுக்குகள் கொண்ட GI கம்பியில் மின்சாரம் பாய்ச்சியிருந்தனர். (வன விலங்குகளிடமிருந்து விவசாய நிலங்களை பாதுகாப்பதற்காக) அந்த இடத்தில் 06.03.2014 இரவு சுமார் 11.00 மணியளவில் 6 வயது மதிக்கத்தக்க காட்டு யானை ஒன்று மின்சாரம் பாய்ச்சப்பட்டிருந்த கம்பிகளில் ஊடுருவியபோது அந்த யானை இறந்துவிட்டது என்பது தெரியவந்தது. அந்த மின் இணைப்பினை மம்சாபுரத்தை சேர்ந்த கணபதியப்பன் என்பவர் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்துள்ளார். நாங்கள் அந்த இடத்திற்கு சென்றபோது அந்த மின் கம்பிகளில் மின்சாரம் இல்லை. ஆனால் சட்டத்திற்கு புறம்பாக கொக்கி போட்டு மின்சாரம் எடுத்து சென்று 2 அடுக்குகள் கொண்ட GI வயரில் மின்சாரத்தை செலுத்தியதற்கான ஆதார பொருட்கள் (5 ஒன்றரை அடி நீளமுள்ள மர கம்புகள் மற்றும் மின்சாரம் பாய்ச்சிய GI கம்பிகளை எடுத்து சம்மந்தப்பட்ட மின் இணைப்பின் அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பாக வனச்சரகர் திருவில்லிபுத்தூர் அவர்கள் வழக்கு பதிவு செய்திருந்தார்கள். மின்சார வாரியம் தரப்பில் உதவிபொறியாளர் மம்சாபுரம் அவர்கள் மின்சாரம் சட்டவிரோதமாக பயன்படுத்தியதற்காக மம்சாபுரம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களிடம் புகார்மனு அளித்தார். மேலும் சம்மந்தப்பட்ட யானை மின்சார விபத்தில் தான் இறந்தது என்று Assistant Veterinary Doctor மம்சாபுரம் அவர்கள் 07.03.2014 அன்று போஸ்ட்மாட்டம் ரிப்போர்ட் வாயிலாக உறுதிபடுத்தியுள்ளார். மின்சாரம் தவறாக/சட்டவிரோதமாக மேற்கண்ட மின் இணைப்பின் குத்தகைதாரராகிய கணபதியப்பன் என்பவர் ரூபாய்.19484/- மற்றும் 01.04.2014 மம்சாபுரம் மின்சார வாரிய அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.